# வெளிநாட்டு வேலையில் இருந்து வெற்றிக் கனவுகளை நிறைவேற்றும் கடன்!

## வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கான மனுசவி வெளிநாட்டு பணியாளர் பல்நோக்கு கடன் திட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லும் உங்களுக்காக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பவற்றுடன் இணைந்து ‘மனுசவி’ வெளிநாட்டு ஊழியர் பல்நோக்குக் கடன் திட்டத்தின் மூலம் உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள். இது ஒரு பல்நோக்கு கடன் திட்டமாக பொது மற்றும் தனியார் வர்த்தக வங்கிகள் மூலம் இலங்கை மத்திய வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**நன்மைகள்**

- வட்டி விகிதம் 8%
- 2மில்லியன் ரூபாய் வரையில் கடன் வசதிகளைப் பெறலாம்
- 3 ஆண்டுகள் வரையில் கடன் செலுத்தலாம்
- தனிப்பட்ட அந்நியச் செலாவணி கணக்கு மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கடன் தவணைகளை செலுத்தும் முறை

**இந்தக் கடன்களை பின்வரும் நோக்கங்களுக்காகப் பெறலாம்**

- வியாபார நடவடிக்கையொன்றை ஆரம்பித்தல் அல்லது விரிவுபடுத்தல்.
- வீடு வாங்குதல், கட்டுதல் அல்லது புணர்நிர்மாணம் செய்தல்
- நிலம் அல்லது வாகனம் வாங்குதல்
- பிள்ளைகளின் உயர் கல்வி நடவடிக்கைகளுக்கு
- வேறு சில உற்பத்தி நோக்கங்களுக்காக

**வேறு முக்கிய காரணிகள்**

- இதற்காக தனியாக அல்லது ஒருங்கிணைந்த கடன் விண்ணப்பங்களை வெளிநாடு செல்ல முன்பாக அல்லது வெளிநாட்டிலிருக்கும் போது சம்பந்தப்பட்ட வங்கிக்கு அனுப்ப வேண்டும்.
- இலங்கை ரூபாய்களில் கடன் செலுத்துவதற்கு அனுமதி இல்லை என்பதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பை முடித்து இலங்கை வந்த பின்னர் மட்டுமே உரிய வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். ரூபாய்களில் கடனை செலுத்துவதாயின் நடைமுறையிலுள்ள சந்தை வட்டி விகிதங்கள் பொருந்தும்.